[5th March 1969

திரு. சா. கணேசன் : கைத்தறித் துணி என்று பெயர் சொல்லி விட்டு விசைத்தறி நூலைப் பயன்படுத்திக்கொண்டு அதற்கு சலுகை, ஊதியம், வாய்ப்பு கொடுக்கலாமா ? அதனால்தான் இயந்திர உதவியின்றி கையினால் நெய்யும் மக்களுக்கு நியாயமான, தேவையான உதவிகள் கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா? அறிந்திருந்தால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கைத்தறிக்குச் சில சலுகைகள் இருக்கின்றன. விசைத் தறிக்குச் சில சலுகைகள் இருக்கின்றன. விசைத் தறி நூலை வைத்து கைத்தறி நூல் என்று மாறாட்டமாகச் சொல்லி தவறு செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

Sale of handloom fabrics

*** 133 *Q*.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Central Government have agreed to give a rebate of 10 paise per rupee hereafter for the sale of handloom fabrics?**

கைத்தறித் துணி விற்பனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கைத்தறித் துணிகளுக்கு இனி ரூபாய்க்கு 10 பைசா தள்ளுபடி கொடுக்க மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நாடு முழுவதும் விற்பனை யாகாமல் பெருமளவிற்குத் தேக்கமடைந்துள்ள கைத்தறித் துணிகளை வாங்குமாறு மக்களைத் தூண்டும் நோக்கத்துடன், முதற்கண் நான்கு வாரங்களுக்கு நாடு முழுவதும் சில்லறையில் விற்பனையாகிற கைத்தறித் துணிக்கு ரூபாய்க்கு ஐந்து காசு கூடுதல் தள்ளுபடியை வழங்குவதற்கும். அவசியமாயிருப்பின் அந்தத் தள்ளுபடியை மூன்று திங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு மேலும் நீட்டிப்பதற்கும், 1968 ஜூலையில் இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. கைத்தறித் துணி சில்லறை விற்பனையின் மீது ஆண்டு முழுவதும் அனுமதிக்கப்படுகிற ஐந்து காசு தள்ளுபடிக்குக் கூடுதலாக மேற்குறிப்பிட்ட தள்ளுபடியை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிலிருந்து 10 பைசா கொடுப்பதாக இருந்தால் மாநில சர்க்காரும் 10 பைசா கொடுத்தால் தேங்கியுள்ள கைத்தறித் துணியை நல்லமுறையில் விற்கலாம் அல்லவா ? அதைப் பற்றிப் பரிசீலிக்கப்படுமா ?

5th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போது சலுகைகளைக் கொடுக்கும் போது எப்படி அவற்றைப் பங்கிட்டுக் கொள்வது என்பதுதான் பிரச்னை. அதில் மத்திய சர்க்கார் 50 சதவிகிதம் கிராண்டாகவும், 25 சதவிகிதம் லோனாகவும் மீதமுள்ள 25 சதவிகிதம் மாநில சர்க்கார் போட வேண்டுமென்றும் நடைமுறையில் இருக்கிறது. நிரந்தரமாக 5 பைசா என்றும் குறிப்பிட்ட நாட்களில் 10 பைசா என்றும் மாநில அரசால் கொடுக்கப்படுகிறது.

Vikramangalam taluk

*134 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Vikramangalam Kanmoi in Thirumangalam taluk of Madurai district is remaining unrepaired ; and

(*b*) the fate of the scheme already formulated for the repair of that tank?

விக்கிரமங்கலம் ஏரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட திருமங்கலம் தாலுகா விக்கிரமங்கலம் கண்மாய், மராமத்து செய்யப்படாமல் இருக்கிறதா ?

(இ) ஏற்கெனவே அந்தக் கண்மாய் மராமத்துக்குப் போட்ட திட்டம் என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) திருமங்கலம் வட்டத்திலுள்ள விக்கிரமங்கலம் ஏரியை சீர் செய்ய வேண்டிய அவசியமில்லாததால், இதுவரை பழுது பார்க்கப் படவில்லை. ஏரியிலுள்ள மூன்று மதகுகள் பாழடைந்த நிலையில் இருந்தமையால் அவைகள் அண்மையில் பழுது பார்க்கப்பட்டன. ஏரி இப்பொழுது நல்ல நிலையில் உள்ளது.

(இ) ஏரியைச் செப்பனிடுவது பற்றி இதற்கு முன்னர் செயற் குறிப்புகள் ஏதுமில்லை.

Shencottah Private Electricity Undertaking

*135 *Q*.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the High Court delivered judgment that the taking over of Shencottah Private Electricity Undertaking by the Government in September, 1968 was invalid ; and

(*b*) if so, the action taken thereon by the Government?